# அரசின் உள்நோக்கம் உலகிற்கு தெரியவருகிறது

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 5 இதழ் 37
யாழ்ப்பாணம் புதன்கிழமை 18 — 03 — 1992

## பி. பி. ஸி. கணிப்பு

(லண்டன்)
வடக்கில் அரசு படைகள் மேற்கொண்டுள்ள அகோர விமானத் தாக்குதல் மூலம் அரசின் உண்மைநிலை தற்போது தெரியவந்துள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

## பௌத்த பிக்குகள் குழு விரைவில் யாழ் வரும்?

(கொழும்பு)
யாழ். நகர் செல்ல முன்பு தென் மாகாணத்தில் பல இடங்களில் கூட்டங்களை நடாத்தி பொதுமக்களின் யோசனைகளையும் பெற்றுக் கொண்டுதான், விடுதலைப்
(4-ம் பக்கம் பார்க்க)

## நான்கு பகுதியில் ஊரடங்கு அமுல்

[கொழும்பு]
கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி பகுதியிலும் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி உதவி அரசாங்க அதி
(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கொக்குத்தொடுவாயில்

# படை வாகன அணிமீது அதிரடி

# 26 இராணுவம் உயிரிழந்தது

### - 3 கனரக வாகனம் தகர்த்தழிப்பு -

(மணலாறு)
**மணலாறு மாவட்டத்தில் கொக்குத்தொடுவாய் பகுதியில் இராணுவ அணி ஒன்றின்மீதுவிடுதலைப்புலிகள்நேற்றுக்காலைமேற்கொண்ட மிகத்திறமையான அதிரடித் தாக்குதலில் மூன்று கனரக வாகனங்கள் தகர்த்தெறியப்பட்டதுடன் 26 படையினரும் ஸ்தலத்திலே உயிரிழந்தனர். மிக நவீனரக ஆயுதங்கள் பலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.**

கொக்குத்தொடுவாய் முகாமிலிருந்து கனரக வாகனங்கள் சகிதம் வெளியேறி முன்னேறிய படையினர் மீது புலிகள் இடைமறித்து திடீர் அதிரடித் தாக்குதலை நடாத்தினர்.

பெருமளவு படையினரைக் கொண்ட இப்படையணியுடன் புலிகள் சுமார் ஏழுமணிநேரம் மிக உக்கிரமாக நேரடிமோதலில் ஈடுபட்டனர். படையின
(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இம்முறை பாரிய தாக்குதல்?

(கொழும்பு)
வடபகுதியில் இம்முறை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கின்போது இராணுவம் பெருமெடுப்பில் பாரிய தாக்குதல் நடாத்த உள்ளதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதலில் முப்படைகளும் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் விடுதலைப் புலிகளும் கடும் எதிர்த்தாக்குதலை நடாத்துவார்களெனவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

## பலாலி ஆட்லறி ஷெல்லுக்கு வடமராட்சியில் 2 பெண்கள் பலி

(வடமராட்சி)
பலாலி இராணுவ முகாமில் இருந்து வடமராட்சி நோக்கி ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதலில், இரண்டு பெண்கள் உயிரிழந்ததுடன், பல வீடுகளும் சேதமடைந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் வல்வெட்டித்துறை வேம்படிப் பகுதியில் விழுந்து வெடித்ததில், திருமதி தங்கரத்தினம் விவேகானந்தன் (47 வயது) என்ற பெண்ணும், கம்பர்மலையில் விழுந்து வெடித்த ஷெல்லின் அதிர்ச்சி
(4-ம் பக்கம் பார்க்க)

## தெ.ஆபிரிக்ககிரிக்கெட் அணி வெளியேற்றப்படலாம்?

[புதுடில்லி]
தென்னுபிரிக்காவில் மக்கள் கருத்துக் கணிப்புக்கான வாக்கெடுப்பு இன்று நடைபெற்று வருவதால், உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தென் ஆபிரிக்க அணி தொடர்ந்து பங்கு பற்றுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஐயப்பாடுகள்
(4-ம் பக்கம் பார்க்க)

## தியாகி அன்னை பூபதி நாலாம் ஆண்டு நினைவு

(யாழ்ப்பாணம்)
இந்திய ஆக்கிரமிப்பாளரின் அராஜக நடவடிக்கையை எதிர்த்து அகிம்சை ரீதியில் உண்ணுநோன்பிருந்து தம்முயிரை ஈந்த அன்னை பூபதியின் நாலாம் ஆண்டு நினைவுகள் நாளை முதல் கொண்டாடப்படவிருக்கிறது.

சுமார் ஒரு மாதகாலம் வரை ஈழம் எங்கும் கொண்டாடப்படும் அன்னை பூபதி நினைவு நிகழ்ச்சியில் விசேட கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

**உண்ணாவிரதம்**

நல்லூர் வட்டவைப் பிரதேசத்தில் அன்னை பூபதி நினைவாக நாளைக் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4 மணி
(4-ம் பக்கம் பார்க்க)

## பத்து லொறிகள் சென்றன

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை துறைமுகத்திலுள்ள உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு வருவதற்காக
(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. [உயர்தர] பரீட்சை ஒத்திவைக்கப்படலாம்

(யாழ்ப்பாணம்)
1991க்கான க. பொ. த. (உயர்தர) விசேட பரீட்சை சில தினங்களுக்கு ஒத்திப் போடப்படலாமென யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை சம்பந்தமான நடவடிக்கைகளை ஒத்திப்போடுமாறு பரீட்சை ஆணையாளரிடமிருந்து தகவல் வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் பரீட்சை ஆணையாளருக்கு பரீட்சை நடக்கும் திகதியை அறிவிக்குமாறு தகவல் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (சு)

## தெரிவுக் குழுவுடன் பேச விடுதலைப் புலிகள் தயாராம்

(கொழும்பு)
வடபகுதிக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு வரும்பட்சத்தில் சில முக்கிய விடயங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடாத்த தாங்கள் தயாராயிருப்பதாகப் புலிகள் தெரிவித்ததாக யாழ். வந்து கொழும்பு திரும்பிய கிறிஸ்தவ தூதுக் குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுடன் பேச்சுக்கள்நடாத்த தாங்கள் தயாராயிருப்பதாகவும் இவர்களிடம் புலிகள் தெரிவித்துள்ளனராம்.

இதேவேளை, தெரிவுக்குழுவினர் யாழ் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

## புனர்வாழ்வு நிவாரணங்களை உடன் நிறுத்துமாறு பணிப்பு

(யாழ்ப்பாணம்]
1990-ம் ஆண்டுக்குப்பின் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு வழங்கப்பட இருந்த ஒருங்கிணைக்கப்பட்ட புனர்வாழ்வு நிவாரணங்கள் அனைத்தையும் உடன் நிறுத்துமாறு வடபகுதி அரச அதிபர்களுக்கு அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளை ஒடுக்குவேன் ஜெயலலிதா சூளுரை

(சென்னை)
தமிழகத்தில் விடுதலைப் புலிகளையும், அவர்களுக்கு ஆதரவாகச்செயற்பட்டுவரும் சக்திகளையும் ஒடுக்கியே தீரப்போவதாகத் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சூளுரைத்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ரான்சிஸ்ரர்கள், I C கள், டயோட், பற்றி சார்சர்கள் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம், (எ-1983)


## சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகாசங்காபிஷேகமும் இளைஞர் விழாவும் நாளை 19-ந் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. [150]

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி. ப. 1-30 மணிக்கு அதிபர் அ. மலக்கியாஸ் தலைமையில் சென். மேரீஸ் மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

## இராசிபலன்

**18 03 1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 05)**

பூரணை நள்ளிரவு 12- 32 வரை, பூரம் மு. ப. 10-38 வரை, அமிர்தயோகம், பங்குனி உத்தரம், ராகுகாலம் பகல் 12-14 முதல் 1-49 வரை, சுபநேரம் மாலை 4-49 முதல் 6-19 வரை பூரணைவிரதம்.

மேடம்: பயனற்றசெயல், கோபமிகுதி, மனக்குறை.

இடபம்: நடைக்கஷ்டம், பயணக்களைப்பு, விரக்தி.

மிதுனம்: விந்தைவிருத்தி, மனமகிழ்ச்சி, பணவரவு.

கடகம்: ரோகபீடை, தொழில்பிணக்கு, செலவு.

சிங்கம்: கடினஉழைப்பு, புதியஸ்தானம், | பாராட்டு.

கன்னி; குடும்பசச்சரவு, காரியதாமதம், ஏமாற்றம்.

துலாம்: வீண்பழி, மூர்க்கத்தனம், குடும்பசுகம்.

விருச்சிகம்: இனசனவருகை, தொழில்லாபம், புகழ்.

தனுசு: திருடர்பயம், கருத்துமுரண்பாடு, வைத்திய செலவு.

மகரம்: குடும்பசச்சரவு, காரியஅலைச்சல், விரோதம்.

கும்பம்: வாக்கு வசீகரம், பெரியோர் ஆசி, காரியசித்தி.

மீனம்: பணியாள் சகாயம், புதியஸ்தானம், புத்திரர் பெருமை.

- ஜோஸ்யர்

## விண்ணப்பம் கோரப்படுகிறது

[மானிப்பாய்]

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் அதிகாரம் பெற்ற அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 20-ந் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளர் த. பெ. இல. 1502, மலேவிதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல்வேண்டும்.

முழு விபரங்களும் பெப்ரவரி மாதம் 14-ந் திகதி வெளிவந்த வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. [71]

# பிரபாவைகைதுசெய்வதுபற்றி இலங்கையுடன்இந்தியாபேசும்

## - அமைச்சர் சவான்

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனையும் அதன் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும் கைது செய்து இந்தியாவிற்கு நாடு கடத்துவது தொடர்பாக இந்திய அரசு விரைவில் இலங்கையுடன் பேச்சுக்கள்நடாத்தவுள்ளது.

பிரபாகரனை கைதுசெய்யுமாறு ராஜ்ய சபாவில் சில எம். பிக்கள் கோரிக்கை விடுத்ததையடுத்து அதற்கு பதிலளித்த உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ராஜீவ் கொலை தொடர்பாக மேற்படி இருவரையும் இலங்கையில் கைதுசெய்து இந்தியா கொண்டுவருவதற்கான சாத்தியம் பற்றி இந்திய அரசு ஆராய்ந்து வருகிறது பிரபாகரனையும் பொட்டம்மானையும் கைது செய்ய வேண்டி உள்ளது என்றும் அவர் கூறினார். (சி)

## யாழ்.நகர் மத்தியில் புத்தாண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீனசந்தை ஞானவைரவர் ஆலய தேவஸ்தானமும், யாழ். நகர வர்த்தகர்களும் இணைந்து நடாத்தும் புத்தாண்டு விழா ஏப்ரல் மாதம் பதின்மூன்றும் திகதி மாலை ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கம்பன்கழகம் ஜெயராஜ் தலைமையில் பட்டிமன்றமும், கலையரங்கம், தவில் கலைஞர் கைதடி பழனிக்கு பாராட்டு, யாழ். பல்கலைக் கழக மாணவரின் நாடகம் உட்பட பல நிகழ்ச்சிகளுடன் இரவு 10-45க்கு 1000 பேருக்கு வங்கி முக்கியஸ்தர்களால் கைவிஷேசமும் வழங்கப்படும். (எஸ்)

## உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு நிதியம்

(புங்குடுதீவு)

கூட்டுறவு அபிவிருத்தி விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்ததற்கான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சின் அறிவுரையுடன் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்நிதியத்தில் அங்கத்துவம்பெற விரும்பும் கூட்டுறவுச்சங்கம் ரூபா பத்தாயிரம் கட்டுநிதியாக செலுத்துதல்வேண்டும்.

நிதியம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அங்கத்துவம் பெற்ற சங்கங்களுக்குமட்டும் கடன் வசதிகள் வழங்கப்படுமென கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறிவித்துள்ளார். (101)

### யாழ். பஸ்நிலையத்தில்

## குடிநீர் மையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பொதுமக்களின் நலன் கருதி குடிநீர் மையமொன்றை ஏற்படுத்த யாழ்ப்பாண றோட்டறிக்கழகமும் யாழ்ப்பாண மாநகரசபையும் இணங்கியுள்ளது.

இக்குடிநீர் மையம், யாழ். நவீனசந்தை ஞானவைரவர் தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் பவுசர்மூலம் இத்தொட்டிக்கு குடிநீர் தினமும் நிரப்படும். (எஸ்)

## இதுவரை 1,500 விண்ணப்பம்

(மானிப்பாய்)

கிராமசேவையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கடந்த 16-ந் திகதி மாத்திரம் 1,500 விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் யாழ். செயலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விண்ணப்பங்கள் செயலகத்தில் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படாததினால் இவற்றை அனுப்புவதற்கு குடாநாட்டிலுள்ள தபாலகங்களில் விண்ணப்பங்கள் நிரம்பி வழிவதையும் காணமுடிகிறது. (71)

### முத்தமிழ் விழாவில்

# சிறந்த நாடகங்களை மேடைஏற்றமுயற்சி

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாக பத்து நாட்கள் இடம்பெறவிருக்கும் முத்தமிழ் விழாவில் சென்ற வருடத்தைப்போல சிறந்த பல நாடகங்களை மேடையேற்றுவதற்காக நாடகத்துறை சம்பந்தமான விழாக்குழுவினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகத்தின் முத்தமிழ் விழா அலுவலகத்தில் கடந்த 15ம் திகதி ஒன்றுகூடி நாடகத்துறை சம்பந்தமான குழுவினர், மேடையேறவிருக்கும் நாடகங்கள்பற்றிய சில முடிவுகளை மேற்கொண்டனர்.

இதன்படி மேடையேற்றப்படவிருக்கும் நாடகங்கள் மரபுவழி நாடகங்கள், மரபுவழி சாராத நாடகங்கள் என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கூத்து, விலாசம் போன்றவை மரபுவழி நாடகங்கள் என்ற பிரிவில் இடம்பெற்றுள்ளன.

மட்டக்களப்பு பிரதேசத்தில் ஆடப்பட்டுவரும் வடமோடி, தென்மோடி கூத்து வகைகளும், மன்னார் பிரதேசத்தில் ஆடப்பட்டுவருகின்ற மாதோட்டப்பாங்கு, வடபாங்கு என்பனவும், வன்னிப் பிரதேசங்களின் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து ஆகியவையும், காமன் கூத்து, அருச்சுனன் தபசு ஆகிய மலையகத்தின் பாரம்பரிய கலை நிகழ்வுகளும், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆடப்பட்டுவருகின்ற வடமோடி, தென்மோடி, காத்தவராயன், மற்றும் இசை நாடகங்கள் ஆகியன மரபுவழி நாடகங்கள் பிரிவில் இடம்பெறலாமெனவும், மரபுவழி சாராத நாடகங்கள் பிரிவில் சரித்திரப் பாங்கான நாடகங்களும், சமூகப்பாங்கான நாடகங்களும் இடம்பெறவேண்டுமெனவும்நாடகக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

மேடையேற்றப்படவுள்ள நாடகங்கள் 1 மணிநேரத்திற்குள் இடம்பெறக்கூடிய விதத்தில் ஆக்கப்படவேண்டும். நாட்டிய நாடகங்கள் 45நிமிட நேரத்திற்குள் இடம்பெறக்கூடிய விதத்தில் ஆக்கப்படலாம். முத்தமிழ் விழாவில் தத்தம் நாடகங்களை மேடையேற்ற விரும்பும் நாடகத்துறை சார்ந்த கலைஞர்கள், மன்றங்கள் நாடக எழுத்துப் பிரதிகளை 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர்', விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம், தலைமைச் செயலகம், கோண்டாவில், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அடுத்த மாதம் 15ம் திகதிக்கு பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (வி)

## சைவசமயபாட பரீட்சை

(உடுவில்)

அகில இலங்கை சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் இவ்வாண்டுக்கான சைவசமயபாடப் பரீட்சை சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சைவசமயபாடப் பரீட்சைக்கான விண்ணப்டங்கள் மே மாதம் 30ம் திகதிக்கு முன்பும் சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சைக்சான விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன்பும் அனுப்பிவைக்கப்படவேண்டும், சைவசமயபாடப்பரீட்சை நவம்பர் முதலாம் திகதி நடைபெறும். பண்டிதர் பரீட்சை மே 29 முதல் 31 வரை நடைபெறும் எனவும் பரீட்சை செயலாளர் திரு. வ. சந்தசாமி தெரிவித்துள்ளார். (109)

## தொண்டமான் எச்சரிக்கை

(கொழும்பு)

இந்திய வம்சாவளி மக்களை விடுதலைப்புலிகளின் அனுதாபிகளாகக் காட்டி மலையகத்தில் இவைாதத்தை கிளப்புவதற்கு சில தீயசக்திகள் முயற்சித்து வருகின்றன. இது குறித்து எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

நுவரெலியாவில் அண்மையில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)


## விளம்பரம்

**வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளரின் செயலகம்**

**கிராம உத்தியோகத்தர் சேவையில் II-ம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான**

**போட்டிப் பரீட்சை - 1992**

**திகதி நீடிப்பு**

11-3-1992இல் பிரசுரமான கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சைக்கான முடிவுத் திகதி 24-03-92 நண்பகல் 11-00 மணிக்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைப்பதற்காக நீடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர்.

யாழ்ப்பாணம். [ஏ-1993]


### எழுத்தாளர்

## டானியலின் நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் அமரர் கே. டானியலின் 6வது நினைவு தினம் மல்லிகைப் பந்தல் இம்மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு, நல்லூர் கம்பன் கோட்டத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

விழாவுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமைவகிப்பார். டொமினிக் ஜீவா வரவேற்புரை நிகழ்த்துவார் பேராசிரியர் செ, சிவஞானசுந்தரம் (நந்தி), பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் நினைவுரைகள் ஆற்ற இருக்கின்றார்கள். (சு)


## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் தம்பித்துரை தனனந்தம்**

[தனம்]

(மண்டைதீவு 1-ம் வட்டாரம்)

**மண்ணில்:** 04-08-1949 **விண்ணில்:** 30-03-1991

சூரியன் ஒளியைத் தர மறந்தாலும் உம் இனிய நினைவுகளை எம் நெஞ்சங்கள் என்றென்றும் மறவாது

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் வண்டி சேவைச் சங்கம்**

55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். [சி-6066]

# இராணுவ வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக புலிகளுடன் அரசு சமரசம் செய்யவேண்டியுள்ளது

## மறுமலர்ச்சிக் கழக கூட்டத்தில் திருநாவுக்கரசு உரை

(யாழ்ப்பாணம்)

''தாராள பொருளாதாரக் கொள்கையினால் மேற்குலக நாடுகளும், இலங்கையும் ஒரு சுமுகமான தீர்வை இனப் பிரச்னையில் முன்வைக்கலாம்''

இவ்வாறு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற மறுமலர்ச்சிக்கழக 12வது ஆண்டுக் கூட்டத்தில் ''உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் இலங்கை அரசியலும்'' என்ற தலைப்பில் மு. திருநாவுக்கரசு பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது; இன்று அமெரிக்க ரஷ்ய காதல் உறவில் பாதிக்கப்படுவது மூன்றாவது உலக நாடுகளே. இதுதான் இன்றைய சர்வதேச உள்நாட்டு, வெளிநாட்டு பரிமாணமாகும்.

இலங்கையின் பொருளாதார வளத்தை வெளிநாட்டு உதவிகளும் புலிகளும் தான் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

ஆரம்பத்தில் கோல்புறாக் காலத்தில் இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டது. அது யுத்ததந்திர ரீதியில் பார்வை செலுத்தப்பட்டது.

இன்று இலங்கை கேந்திர முக்கியத்துவம் என்ற நிலையில் இருந்து மாறி, தெற்கு,தென் கிழக்காசிய நாடுகளுக்கு உலக வியாபாரச் சந்தையின் மையமாகத் திகழ்கிறது,

ஜே. ஆர். அரசாங்கத்தால் அமுலாக்கப்பட்ட தாராள பொருளாதாரக் கொள்கை, பிரேமதாசா ஆட்சியிலும் இரண்டாவது தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு மூலதனம் 1989ம்ஆண்டு 18 மில்லியன் டொலராக இருந்தது. 90ம் ஆண்டில் 33 மில்லியன் டொலராக உயர்ந்தது. 1991ம் ஆண்டு மேலும் அதிகரித்துவிட்டது.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற உதவி வழங்கும் அமைப்புக்கள் இலங்கை அரசோடு1855 மில்லியன் டொலர்களுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

மேற்குலக நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் விற்பனையைக் கருத்திற்கொண்டு இலங்கையில் 89—91க்கிடையில் 14 அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன. இன்று 33 அரச நிறுவனங்கள் தனியார்மயமாவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வெளிநாட்டு அரசாங்கங்களுக்கு துணை போவதற்கும் அவர்களின் தாராளப் பொருளாதாரக் கொள்கையை நிலைநிறுத்துவதற்கும் அவர்களுக்கு வசதியாக போக்குவரத்து, தொலைத்தொடர்பு சாதனங்கள் நிறுவுவதற்கே கூடிய வெளிநாட்டு உதவிகள்பயன் படுத்தப்பட்டன.

இங்கும்கூட இந்த நெருக்கடியான நேரத்தில் இலங்கை தமது உற்பத்தியில் 45 வீதமானதை தைக்கப்பட்ட ஆடைகள், பொம்மைகள் போன்ற வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யக்கூடிய பொருட்களிலே அக்கறையாக இருந்தன.

இந்த வருடத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு உதவிவழங்கும் நாடுகள் இலங்கை அரசாங்கம் கேட்டதிலும் பார்க்க 50 லட்சம் டொலர் உதவியை கூடுதலாக கொடுத்துள்ளன.

முக்கியமாக பிரேமதாசாவின் அரசை பாதுகாப்பது மாத்திரமன்று, கொழும்பை ஒரு உலகச் சந்தையாக மாற்றுவதின் பிரதிபலிப்பே இக் கூடுதல் நிதிக்கான காரணங்களாகும்.

இலங்கையில் குடும்ப ஆதிக்க அரசாங்கங்கள் தோன்றியதினால் அவர்கள் தங்கள் குடும்பநலனுக்காக இனப் பிரச்னையை முன்வைத்தார்கள்.

இன்றைய நிலையில் இந்த குடும்ப ஆதிக்க ஆட்சி போய் ஐக்கியதேசியக்கட்சியும், அதிலிருந்து பிரிந்த லலித் காமினி கட்சியும் அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற முயற்சி செய்கிறார்கள்.

இந்தநிலையில் சிறுபான்மை மக்களின் வாக்குகள் யு.என்.பி—லலித் காமினி கட்சி—ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு தேவையாக உள்ளது.

இந்த நிலையில் தான் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இனத்துவேஷத்தை கைவிட்டு சமாதானத் தீர்வு வேண்டுமென்று, யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படவேண்டும் என்பதுபோல அண்மைக்காலத்தில் அறிக்கைகள் வெளியிட்டுள்ளார்கள்.

இன்றைய இலங்கை அரசாங்கத்துக்கு சுமூகமாக இனப் பிரச்னை தீர்க்கவேண்டுமென்பதற்கு அரசியலைவிட, இராணுவத்தின் வளர்ச்சியை கட்டுப்படுத்தவேண்டும். இதனால் விடுதலைப்புலிகளோடு சமரசத்துக்கு வரவேண்டிய நிலையுமுள்ளது. இந்தவகையான இராணுவ ஆட்சியை மேற்குலகமும் விரும்பவில்லை. அதனால் மேற்குலகநாடுகளும் தங்களது தாராள பொருளாதாரக் கொள்கையால்இலங்கை இனப் பிரச்னையில் அக்கறைப் படக்கூடும் எனத் தெரிய வருகிறது.

இன்று வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு கொழும்பு சந்தையாக உள்ளது. தமிழீழ மக்களையும் கொழும்பை நோக்கி ஓடச் செய்யக்கூடிய அபாயகரமான நிலையும் ஏற்பட்டுவருகிறது. இதனால் எமது அபிவிருத்தி குறைந்து தேசியத் தன்மை குலையும் நிலையும் உள்ளது. (சு)

## வவுனியா திருமலை பஸ்சேவை ஆரம்பம்

(வவுனியா)

இலங்கைப் போக்குவரத்து சபையால் வவுனியா-திருமலை பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது,

வவுனியா தாண்டிக்குளத்திலிருந்து திருமலைக்கும் திருமலையிலிருந்து தாண்டிக்குளத்துக்கும் இச்சேவை நடைபெறும்.

ஒருவழிப்பாதைக்கு கட்டணம் 25/-ரூபா அறவிடப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குளத்திலிருந்து தினமும் காலை 10 மணிக்கு புறப்படும் இந்த பஸ் அன்று மாலை 4 மணிக்கு திருமலையை சென்றடையும்

பன்குளம் வழியாக செல்லும் இந்த பஸ் திருமலையிலிருந்து காலை 8.30க்கு புறப்பட்டு பி. பகல் 2 மணிக்கு வவுனியா வந்தடையும். (59)

## தென்மராட்சி மாணவர்க்கு மின்சாரவசதி

(சாவகச்சேரி)

யாழ். செஞ்சிலுவைச்சங்கம் தென்மராட்சி மாணவர்களின் நன்மைகருதி ஜெனரேட்டர் மூலம் மின்சாரத்தை தினமும் மூன்று மணி நேரம் வழங்கவுள்ளது.

இதன் பரீட்சார்த்தமாக 13ந் திகதி வெள்ளி இரவு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது, எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த மின்சார வசதியை பயன்படுத்தினர்.

தென்மராட்சியைச் சேர்ந்த சகல பாடசாலை மாணவர்களும் தினமும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9மணிவரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மின் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (155)

## தீவகமக்கள் நலன்காக்கும் கழகம்

(புங்குடுதீவு)

இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலும் முகாம்களில் தங்கியிருக்கும் தீவக மக்களின் நலன்களைப் பேணவும் இவர்களின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்குடனும் 'தீவக மக்கள் நலன்காக்கும் கழகம்' என்ற பெயரில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. (101)

## சமயமுயற்சிக் கடன்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாஜம் சமயமுயற்சிக் கடனாக5,000 ரூபா, முதல் 10,000 ரூபா வரை வழங்கவிருக்கின்றது. இக்கடனுதவி கிராமிய ரீதியில் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

சமயமுயற்சி, வேலைவாய்ப்புக்கடன்களைத் தனியாகவும் கூட்டாகவும் பெற்றுக்கொள்ளலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## "பெற்றோர், பழைய மாணவர் பாடசாலைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்"

(அச்சுவேலி)

பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு பெற்றோர், பழைய மாணவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை இல்லமெய்வல்லுநர் போட்டியில்பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட மருதனார்மடம் கோட்டக்கல்வி அலுவலக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். இரத்தினராசா கூறினார்.

அதிபர் திரு. பு. கதிரித்தம்பி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் மேலும் கூறியதாவது:

பாடசாலைகளின் தேவைகள் பல நிறைவு செய்யப்படாமல் உள்ளன. அரசாங்கத்தையோ கல்வி அதிகாரிகளையோ எதிர்பார்த்துக் கொண்டிராமல் பெற்றோர், பழைய மாணவர்கள் முன்வந்து உதவிசெய்ய வேண்டும் என்றார்,

சம்பந்தர் இல்லம் 229புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், அப்பர் இல்லம் 201½ புள்ளிகளையும், சுந்தரர் இல்லம் 189½ புள்ளிகளைப் பெற்று இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றுக்கொண்டன.

## இன்று

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்திஆலய மஹா கும்பாபிஷேகம், பங்குனி உத்தர தினமான இன்று காலை 10 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தியும் அருளுரை வழங்குவர். பி. ப. 5 மணியளவில் யாழ். இந்து ஆசிரியர் திரு. த. சிவகுமாரன், ஆசிரியை செல்வி குமுதினி தங்கவேலின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

ஃ ஃ

(அரியாலை)

யாழ்.கொய்யாத்தோட்டம் ஸ்ரீஞான செல்வ விநாயகர் கோவிலில் பங்குனி உத்தர விசேட சொற்பொழிவு இடம்பெறும். இன்று பி.ப. 4 மணிக்கு 'இன்பமும்துன்பமும்' என்னும் பொருள்பற்றி 'அருள்மொழிச்செல்வர்' கனகசபாபதி- நாகேஸ்வரன் சொற்பொழிவாற்றுவார்.

## கடலூர் பொலிஸ்நிலையம் மீது திடீர்த் தாக்குதல்

### 7 பொலிஸார் படுகாயம்

[சென்னை]

தமிழகத்தில் தென்னாற்காடு மாவட்டம் கடலூர் அருகேயுள்ள பொலிஸ் நிலையத்தை கோஷ்டியொன்று நேற்றுமுன்தினம் திடீரென தாக்கியதால் ஒரு சப்இன்ஸ்பெக்டர் உட்பட 4 பொலிசார் படுகாயமடைந்தனர்.

ஒரு வழக்குத் தொடர்பாக கைது செய்து காவலில் இருந்த 9 பேரை விடுவிக்கக் கோரி 750க்கு மேற்பட்ட கூட்டத்தினர் அபாயகரமான ஆயுதங்களுடன் வந்து பொலிஸ் நிலையத்தை தாக்கினர்.

பொலிசார் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு கூட்டத்தினரை கலைத்தனர். இதன்போது நடைபெற்ற மோதலிலேயே பொலிசார் காயமடைந்தனர்.

தற்போது அப்பிரதேசத்தில் கூடுதலான பொலிசார் காவலில் நிறுத்தப்பட்டுள்ளனர். [கே]

## இலக்கிய நூல்களுக்கு சாகித்திய பரிசில்

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 1990,91-ம் ஆண்டு காலப்பகுதியில் அச்சில் வெளியிடப்பட்ட இலக்கிய நூல்களுக்கு சாகித்தியப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சகல மாவட்டச் செயலகங்கள் பிரதிச் செயலர் அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பிவைத்துள்ள அறிவித்தலில் இம் மாகாணத்தில் மேற்படி ஆண்டுகளில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை(மரபு)புதுக் கவிதை, சமய இலக்கியம், வரலாறு, ஆய்வு இலக்கியம், நாடகம், சிறுவர் இலக்கியம், மொழியியல் ஆகிய நூல்களில் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு நூலுக்கும் தலா மூவாயிரம் ரொக்கப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளது.

எழுத்தாளர்கள் தமது அச்சில் வெளிவந்த ஆக்கங்கள் படைப்புக்களின் மூன்று பிரதிகளை இம் மாதம் 31ந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் கலாச்சார அலுவல்கள் கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் யூலை மாதத்தில் நடைபெறும் சாகித்திய (இலக்கிய) விழாவின்போது தேர்ந்தெடுக்கப்படும் நூல்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (71)

## வன்செயலினால் பாதிக்கப்பட்ட குடும்ப விபரம் சேகரிப்பு

(சித்தன்கேணி)

வன்செயல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர் பணிமனைகளுக்கும் சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் சுற்றுநிருபம்அனுப்பி வைத்துள்ளார்.

சுற்றுநிருபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பெயர், விலாசம், தொழில், நஷ்டஈடு பெற்றுள்ளாரா பெற்றுக்கொண்ட தொகை, குடும்பத்தில் தங்கியிருப்பவர்களின் விபரங்கள், தொழில் செய்பவர்கள், பாடசாலை செல்பவர்கள் அவர்களுக்குரிய தேவைகள், குடும்பத்தின் வருமானம் போன்ற விபரங்களை அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (137)

## தவக்கால நற்சிந்தனை

எல்லோர் முன்பாகவும் பெரியவனாகவும், முதல்வனாகவும் இருக்கவும் அதிகாரம் செலுத்துபவனாகவும் அல்ல, பணியாளனாக இருப்பது தான் சிறந்தது. மற்றவர்களுக்கு சேவை செய்வது தான் சிறந்தது. மற்றவர்களுக்கு சேவை செய்வது தான் நோக்கமாயிருக்க வேண்டும். ''மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும் பல நடையமீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்'' (மத். 20: 28)

மோ. தார்சியஸ்

# தனதுயோசனையைஏற்குமாறு தொண்டமான் கோரவில்லை

## தெரிவுக்குழு உறுப்பினர் தகவல்

(கொழும்பு)
அமைச்சர் தொண்டமான், தான் முன்வைத்துள்ள சமாதான யோசனையை ஏற்குமாறு கோரவில்லையென தெரிவுக்குழுஉறுப்பினரும் கேகாலை மாவட்ட எம். பி.யுமான திரு. தர்மதேவ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இனப்பிரச்னை தீர்வுக்கு தனதுயோசனையை முன்வைத்துள்ளாரே தவிர அதை அரசு ஏற்கவேண்டுமென்ன கோரவில்லை, அதை அரசு ஏற்றுக்கொண்டதாகவும் யாரும் கருதக்கூடாது. இனப் பிரச்னைத் தீர்வை விரும்புபவர்கள் யாராயினும் தமது யோசனையைத் தெரிவுக்குழுவின் முன் சமர்ப்பிக்கலாமெனவும் அவர் கூறினுர். (சி)

## கடைகள் இன்று மூடப்படும்

(யாழ்ப்பாணம்)
பங்குனி உத்தரத்தை முன்னிட்டு இன்று சகல வர்த்தக ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கும் நோக்குடன் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும் என வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கமும், யாழ். வர்த்தகர் சங்கமும் இணைந்து அறிவித்துள்ளன.

## திருத்தல பாதயாத்திரை இன்று பூர்த்தியாகிறது

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினுல் கடந்த இரு வாரங்களாக நடத்தப்பட்டு வந்த திருத்தலப் பாதயாத்திரை இன்று புதன்கிழமை கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் பூர்த்தியடையவுள்ளது.

இம்மாதம் 6ம் திகதி நல்லை ஆதீனத்தில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பாதயாத்திரையில் ஆத்மஜோதி நா. முத்தையா உட்படப் பெருந்தொகையானேர் கலந்து கொண்டனர்.

மேற்படி பாதயாத்திரைப் பூர்த்திவிழாவில் அறிஞர்பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றவுள்ளனர். ஆத்மஜோதி முத்தையா பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார், [ச]

## ஏப்ரல் மாதம் முதல் புதிய நிவாரண முத்திரை

[யாழ்ப்பாணம்]
ஏப்ரல் மாதம் முதல் புதிய வறுமை நிவாரண முத்திரைகள் நாடுபூராவிலும் வழங்கப்படவுள்ளது.

இந்த வாரம் முதல் தற்போது வழங்கப்பட்டு வரும் உணவு முத்திரைகள் அனைத்துக்கும் உணவுப் பொருட்கள் ஒரே தடவையில் வழங்கப்படுமென்றும் இக்கூப்பன்கள் முடிவடைந்தவுடன் புதிய கூப்பன் முத்திரைகள் அடுத்த மாதம் முதல் வழங்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகின்றது. ]வி)

## தீவுப்பகுதி ஆசிரியர்க்கு சம்பளம் வழங்கவும்

(யாழ்ப்பாணம்)
தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துயாழ். மாவட்டத்தில் நடைபெறும் பாடசாலை ஆசிரியர்களுக்கு அடுத்த மாதச் சம்பளத்தை இடம் பெயர்ந்த இடத்தில் கொடுக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் ஜனுதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது தீவுப்பகுதியில் இயங்கி வந்த ஏனைய திணைக்களங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது. அந்தத் திணைக்களங்களில் கடமைபார்க்கும் ஊழியர்களுக்கு சம்பளம் இடம் பெயர்ந்து வந்த இடத்தில் கொடுக்க நடவடிக்கை எடுக்கும்போது இந்த இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு அதே போன்று சம்பளத்தை வழங்குங்கள்'' (சு)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 30 — 10 — 1936

மறைவு 17 — 02 — 1992

அமரர்

### பெரியார் செல்லத்துரை

**(பிரதம புகையிரதக் காப்பாளர், மருதானை)**

பிறந்த குடி பெருமையுறப்
புகுந்த குடி பூரிக்க
கறந்த பசும் பாலாகக்
கள்ளமற்ற நெஞ்சுடனே
பேணினீரே சிறகுகளுள்!
பிள்ளை பெண்டு உறவு சுற்றம்
காணவொரு கண்கண்ட
கடவுளுமைப் பிரிந்தோமே!
பச்சைக் கொடிகள் காட்டிப்
பலவண்டி ஓட்டினுர்க்கு
அச்சம் கலக்க முற
அந்தோ செங் கொடியாக
மரணம் ஏன்? மாரடைப்பேன்?
வாரீரோ உயிர் நிலவாய்!
இரணங் கொள் இதயங்கள்
இதம் பெறவந் தருள்வீரோ!
உயிர்களுக்குள் உயிராயெம்
உணர்வுகளுள் உணர்வாகிப்
பயில்க! புயற் பட்டலையும்
படகெம்மை மீட்டிடுக!

அன்னுரின் பூதவுடலை, பல பிரச்னைகளின் மத்தியில் அனுராதபுரத்திலிருந்து எமது வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்த அன்னுரின் புகையிரதக் காப்பாள நண்பர்களுக்கு நன்றி கூறுகின்ருேம். அன்றியும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (18-03-92) புதன்கிழமை இல்லத்தில் நிகழவிருக்கும் அன்னுரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

''பிருந்த வாசம்'', நவக்கிரி, புத்தூர். **மனைவி, மக்கள்.** (சி 6069)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்று காலை கல்லூரி அதிபர் வண. மைக்கல் ஜோசப் தலைமையில் நடைபெறும். (வி)

### பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
யால், நல்லதம்பி தங்கமுத்து (60 வயது) என்ற வயோதிப மாதும் இறந்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒருவர் கொல்லப்பட்டதாக வெளிவந்த செய்தி தவருகும். கொல்லப் பட்டதாகக் கூறப்பட்ட முத்துலிங்கம் அமிர்தலிங்கம் (20 வயது) படுகாயமடைந்த நிலையில் தற்போது மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (51)

### அரசின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பெருமளவு மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஊரடங்கு போடப்பட்டு விமானத்தாக்குதல் நடாத்தப்படுவதன் மூலம் மக்களை மதியாது அரசு தாக்குதலை ஆரம்பித்திருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

இதன்மூலம் அரசின் நோக்கம் என்னஎன்பதும் உலகிற்கு தெரியவருவதாகவும் அச் செய்தி தெரிவித்தது. (சி)

### நான்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பர் பிரிவு என்பனவற்றிலும் நேற்றுக்காலை 6-00 மணிக்கு அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்குமென இராணுவத் தலைமையலுவலகம் அறிவித்துள்ளது.

இராணுவ தாக்குதல்களுக்காக இந்த ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார். [மா]

### புனர்வாழ்வு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கே இனிமேல் இந்நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு மேலும் தெரிவித்துள்ளது.

1990 - ம் ஆண்டுக்குப் பின்பு பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள பொதுமக்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு நிவாரணம் வழங்கப்படுமென அரசு அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

### பௌத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
புலிகளை சந்திக்க யாழ். நகர் செல்வோம்''

இவ்வாறு யாழ். நகர் செல்லவிருக்கும் 10 பேரை கொண்ட பௌத்த பிக்குகளின் குழுவின் பிரதிநிதி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

இன்றைய பிரச்னை தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்து கொள்ளவும் இவ் விஜயத்தின் மூலம் முடியும்.

எமது யாழ். நகர் பயணத்துக்கான ஒழுங்குகளை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தற்போது மேற்கொண்டு வருகின்றது என்று அந்த பௌத்தபிக்குகளின்பிரதி நிதி மேலும் தெரிவித்தார். [வி]

### தெ. ஆபிரிக்கா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தோன்றியுள்ளன.

இந்தக் கருத்துக்கணிப்பு தோல்வியடைந்தால் உலகக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியிலிருந்து தென்னுபிரிக்காவெளியேறுவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி நிர்வாகிகள் பேச்சு நடத்துவார்கள்.

தென்னுபிரிக்காவில் நடைபெறும் கருத்துக் கணிப்பினை வாக்காளர்கள் புறக்கணித்து விட்டால்உலகக்கிண்ணக்கிரிக்கெட் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதைத்தவிர தமது குழுவிற்கு வேறு வழியே கிடையாதென தென்னுபிரிக்க யுனைட்டட் கிரிக்கெட் போட்டியின் தலைவர் கூறியிருக்கிறுர்.

### புலிகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் முக்கிய பிரமுகர்களையும் அரசியல் வாதிகளையும் கொலை செய்யவும் முக்கிய நிறுவனங்களை தகர்க்கவும் சிறைச்சாலைகளை உடைக்கவும் திட்டம் தீட்டியிருந்தார்கள். எனினும் புலனுய்வுத்துறையினரின் விழிப்புணர்ச்சியாலும், தேசவிரோதப் போக்கிற்கு எதிரான அரசின் நடவடிக்கைகளாலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன.

ஆனுலும் இவர்களின் இச் செயலை தடுப்பதும், திட்டங்களை முறியடிப்பதும் நமது தலையாய கடமையாகும்.

மேலும் ராஜீவ் காந்தி கொலையை நியாயப்படுத்தும் சில சக்திகளின் நடமாட்டமும் உள்ளதாகவும், இவர்கள் புலிகளுக்கு அனுசரணையாகச் செயற்பட்டு வருவதாகவும் இவர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.(க)

### தியாகி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
வரை அடையாள உண்ணுவிரதமும் மாலை 7 மணிக்கு அரியாலை சனசமூக நிலையத்தில் நினைவஞ்சலிக்கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். [க]

### பத்து

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
நேற்று பத்து லொறிகள் சென்றன.

அடுத்த வாரம் முதல் இந்த லொறிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப் படலாம் என்றும், யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (வி]

## விவாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)
ஏயர் லங்கா நிறுவனம் மேலதிகமாக விமானங்களை கொள்வனவு செய்தமை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி வங்குரோத்து நிலைமை ஆகியவை தொடர்பாக நேற்று நாடாளுமன்றில் அரசுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை மீதானவிவாதம் நாளை வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை எதிர்கட்சிகளள் கூட்டாக அரசு மீது கொண்டுவந்துள்ளன.

### கொக்குத்தொடுவாயில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ருக்கு உதவியாக விமான, கடல் உதவிகள் வழங்கப்பட்டன.

இறுதியில் 26 படையினர் கொல்லப்பட்டதுடன், 3 கனரக வாகனங்கள் தகர்த்தழிக்கப்பட்ட நிலையில், பெருமளவு படையினர் காயமடைந்த நிலையில் இராணுவ அணி முகாம் திரும்பியது.

இத்தாக்குதலில் 26 படையினர் கொல்லப்பட்டதாக அரசு நேற்று ஊர்ஜிதம் செய்தது.

இம்மோதலில் புலிகள் கைப்பற்றிய ஆயுத விபரம் வருமாறு:

106 மி. மீற்றர் ஆர். பி. எல் 01, அதற்குரிய எறிகணைகள் 05, 50 கலிபர் துப்பாக்கி 01, அதற்குரிய தொடர் ரவைகள் 2,000, ஆர். பி. ஜி. 01, அதற்குரிய எறிகணைகள் 03, ஏ. கே. ரக இலகு இயந்திரதுப்பாக்கிகள் 02, அதற்குரிய ரவைக்கூடுகள் இரண்டும் 90 ரவைகளும் 203 ரக கைத்துப்பாக்கி 01, அதற்குரிய எறிகணை 01, ரி-81 ரகதுப்பாக்கி 02, அதற்குரிய ரவைக் கூடுகள் 10, ரி-56 ரக துப்பாக்கி 07' அதற்குரிய ரவைக்கூடுகள் 28, ஜே. ஆர். ரக கைக்குண்டுகள் 07, நடுத்தர ரவைகள் 1000 உட்பட பல ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. [க]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registred as a News Peper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81.